Volume No: 1 Issue 1 September 2016

International Multidisciplinary Innovative Research Journal
-An International refereed e-journal of literary Explorations
ISSN: 2456 - 4613
IMIRJ, 1(1), 2016 [1-6]



# அய்க்கண் சிறுகதைகளில் குடும்ப மகளிரின் சிக்கல்கள்

**பாலசரஸ்வதி.ஆ.**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

E-mail: balasaraswathivnr@gmail.com

## முன்னுரை

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்று ஆன்றோர் கூறுவர். பண்பாடு வளரக் குடும்பம் உறுதுணை செய்கிறது. குடும்பம் சொர்க்கமாவதும் நரகமாவதும் அதன் உறுப்பினர்களாகிய கணவர், மனைவி கையில் தான் உள்ளது. "சமூகம் என்பது என்ன? குடும்பங்களின் கட்டமைப்புத் தானே? எனவே குடும்பத்தைத் தாக்கிச் சீர்குலைக்கும் சில அடிப்படையான சிக்கல்கள் சமூகத்தையும் சென்று தாக்குவது இயற்கையே. இதனால் நாடும் கலாச்சாரமும் பாதிக்கப்படும் அபாயமும் உள்ளது"[1] என்ற டேவிட் சித்தையாவின் கூற்று இங்கு நினைவுக் கூரத்தக்கது.

அய்க்கண் சிறுகதைகளில் குறிப்பிடத் தகுந்தது கருப்பொருள். அது நல்ல சத்துள்ளது. வெறும் சக்கை அன்று. அகன்ற வலுவான ஆழமான கருப்பொருளை வைத்துத் தான் கதை மாளிகை எழுப்புவார். அவருடைய கதைகள் பொழுது போக்குக் கதைகள் இல்லை. சிந்தனையைத் தூண்டி அறிவுக்கு வேலை கொடுப்பன. குடும்ப அமைப்பில் பெண்களின் உரிமைகள், கடமைகளை அவருடைய கதைகள் ஆராய்கின்றன. தாய்மைக்கு ஒரு புதிய பொருள் காணுகிறார். மனைவி, மருமகள், தாய்மைப்பேறு பெறாத பெண்களின் நிலைகளைப் புதிய கோணத்தில் அணுகுகிறார். தாயை மதிக்கும் மனைவியிடம் கணவனின் அன்பு அதிகமாகிறது என்று 'பகவத் கீதை' யை மேற்கோள் காட்டுகிறார்.

- குடும்ப வாழ்வில் பெண்
- தாய்மையில் பெண்
- மனைவியாகப் பெண்
- மருமகளாகப் பெண்
- விதவைப் பெண்
- தாய்மைப்பேறு பெறாத பெண்

சமுதாயத்தில் அங்கமாக விளங்கும் ஒவ்வொரு குடும்பத்தையும் அற்புதமாக உருவாக்கி வைத்திருப்பவள் நம் நாட்டுப் பெண். நம் நாட்டின் குடும்பத்துப் பெண்ணை அடிமையாக நடத்துகிறார்கள் என்ற மேலை நாட்டார் கூற்றை மறுத்துப் பெண்ணைத் தாயாக வணங்குகிறார்கள்; பெண்ணைத் தியாகப் பிறவி என்று பாராட்டுகிறார்கள்; பெண்ணின் கருத்தை மதித்து ஏற்றுக் கொள்கிறார்கள் என்ற இந்தியக் குடும்ப அமைப்பு முறையைப் போற்றுவது 'வேர்' எனும் சிறுகதையின் நோக்கம். கிராமத்துக் குடும்பம் ஒன்றைப் படைத்துக் காட்டி, தன் கருத்தை நிறுவவும் செய்கிறார். தாய், அஃறிணை விலங்குகள், பறவைகள் போல, தன் பிள்ளைகளிடம் பிரதிபலனை எதிர்பார்ப்பவள் அல்லள் என்பது

'அவள் ஓர் அ.்.றிணை' கதையின் சாராம்சமாகும். இவ்வாறு குடும்பப் பின்னணியில் மகளிரின் வேறுவேறு விதமான சிக்கல்கள் இங்கு ஆராயப்படுகிறது.

**குறிப்புச் சொற்கள்:** பகவத்கீதை - இந்து சமய வேதமாகும் வடமொழியில் எழுதப்பட்டது.
அறுதாலி – கணவனை இழந்தப் பெண்

## குடும்ப வாழ்வில் பெண்

அமெரிக்காவிலிருந்து பேராசிரியர் வில்லியம் மில்லர் 'இந்தியாவில் பெண்கள் நிலை' என்ற தலைப்பில் ஆராய்வதற்கு வருகிறார். கோட்டையூரில் உள்ள கருப்பையா அம்பலக்காரர் வீட்டில் தங்கி, அவர் குடும்பத்தையே ஆய்வுக்கு மூலமாக எடுத்துக் கொள்கிறார். கருப்பையாவின் வயதான தாய், இரு தம்பிகள், ஒரு தம்பியின் மனைவி என்று பெரிய கூட்டுக் குடும்பம். அம்பலகாரர் வெளியூர் போய் விட்டு வரும் பொழுதெல்லாம் தாயை வணங்குதல், கருப்பையாவின் மனைவி முடிவெடுக்கும் விசயத்தைக் கணவன் ஏற்றுக் கொள்ளுதல், கருப்பையாவின் தம்பி மனைவி, கணவனை விட்டுப் பிரிந்தும் மோனத் தவமிருப்பது, இப்படி ஒவ்வொரு நிகழ்ச்சியையும் மில்லர் உற்று நோக்குகிறார். கணவன் - மனைவியிடையே சண்டையொன்று சொல்லிக் கருப்பையாவிடம் பஞ்சாயத்திற்கு வருகின்றனர். 'ஒருத்தனை இன்னொருத்தன் அடிக்கிற மாதிரி இது ஒரு சமுதாயப்பிரச்சனை இல்லை. இது கணவன் - மனைவி சம்பந்தப்பட்ட உணர்ச்சிப் பிரச்சனை என்று கூறும். உளவியல் படிக்காத கருப்பையாவின் தீர்ப்பைக் கண்டு வியக்கிறார் மில்லர். மேல் நாட்டில் பெண்ணுரிமை என்ற பெயரில் சிறுசிறு காரணத்திற்கெல்லாம், புனிதமான பந்தத்தை ரத்து செய்து விட்டு, ஆயுள் முழுவதும் நிலையற்ற இல்லறத்திலேயே வாழ்கின்ற மக்கள். இங்கே, பெண்கள் கணவன் செய்யும் தவறுகளை பொறுத்துக் கொண்டு மௌனமாயிருப்பது அடிமைத்தனமன்று, பொறுப்புணர்ச்சி"[3] என்று மேற்கு கிழக்கு இல்லறங்களைக் கார் டிரைவர் ஒப்பிடுகிறார். "வெளியே பரந்து விரிந்து தோன்றும் மரத்தை, நீர் இழுத்து நிறுத்தி வைத்திருப்பது மண்ணுக்குள் இருக்கும் வேர் தானே? அது மாதிரிதான் இந்த நாட்டுப் பெண்கள்"[4] என்று கூறி விட்டு விமானம் ஏறுகிறார். மேலை நாடுகளில் பரவலாகப் பேசப்படும் நம் இல்லறத்தை, குடும்பப்பிணைப்பைப் பற்றிய உண்மை நிலையை உணர்த்த மேலை நாட்டார் ஒருவரையே இங்கு கொண்டு வந்தது போற்றத் தக்கது. மேலை நாட்டு நாகரிகங்களில் நமக்குப் பொருந்தாதது ஒவ்வாததையும் நாம் கண்மூடிப் பின்பற்றி நம்முடைய 'தற்காத்துத் தற்கொண்டான் பேணும்' இல்லற அமைப்பு கெட்டு விடக் கூடாது என்று நினைக்கிறார். சமுதாய சீர் திருத்த எழுத்தாளர் அய்க்கண். ஒவ்வொரு வீட்டிலும் பெண்ணின் விருப்பப்படிப் பல செயல்கள் நடக்கின்றன. அவர்களின் ஆசையே பெரும்பாலும் நிறைவேற்றப்படுகிறது என்பதால் தான் பெண்ணுக்குச் சம உரிமைக்கும் மேற்பட்ட உரிமை இருக்கிறது என்கிறார்.

## தாய்மையில் பெண்

ஒவ்வொரு பெண்ணிற்கும் தாய்மைப் பேறு என்பது மிக புனிதமானவை ஆகும். தாய் பேறு பெண் அடைந்து பின்பு தன் பிள்ளைக்காக என்று பல எண்ணங்களை தியாகம் செய்யும் தியாகியாகவும், பிள்ளையின் மனதைப் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து வாழவும் பழகிக் கொள்கிறாள். அவ்வாறு தாய்மையின் சிறப்பினை உணர்த்தும் கதை தான் 'அவள் ஓர் அ.்.றிணை'. இக்கதையில் கணவனை இழந்த மூக்காயி, இருந்த சிறிதளவு நிலத்தை விற்று மூத்த மகனைப் படிக்க வைக்கிறாள். பணக்காரப் பெண்ணின் உறவு கிடைத்துத் தாயை மறந்து விட்டுப் போய் விடுகின்றான். அடுத்த மகனைப் படிக்க வைத்து, வேலை வாங்கிக் கொடுத்தால் தன் துன்பம் குறையும் இவனாவது தன்னை வைத்துக் காப்பாற்றுவான் என்று நினைக்கிறாள். அதற்காகத் தான் குடியிருந்த வீட்டை விற்றுப் படிக்க வைத்து வேலை வாங்கித் தந்து தன் உறவுக்காரப் பெண்ணைத் திருமணமும் செய்து வைக்கிறாள்.

'தண்டச் சோறு' என்று மருமகளிடமிருந்து வரும் உணவினை பிச்சையாக பாவித்துமூன்றாவது மகனோடு தான் முதலில் வேலை செய்த பண்ணையார் வீட்டுக்கு,வீட்டு வேலை செய்ய வந்து விடுகின்றாள். மூன்றாவது மகனை 'இங்கிலிஸ்' பள்ளிக்கு அனுப்ப நினைக்கிறாள். நாலு வீட்டோடு இன்னும் இரண்டு வீட்டோடு இன்னும் இரண்டு வீடு

வேலை செய்து இவனுக்கும் ஏதாவது செய்ய வேண்டாமா? என்று நினைக்கிறாள். தன் மூத்த பிள்ளைகளால் இத்தனை ஏமாற்றத்துக்கு உள்ளான பிறகும் இந்தப் பிள்ளைப் படித்து வேலை பார்த்துத் தன்னைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் அவனுக்காக உழைத்துத் தேயத் தயாராகி விட்டாள் அதாங்க தாய். தாய் என்கிறவ அஃறிணை மாதிரி.... அஃறிணை மிருகங்கள் பறவைகளிடமிருந்து நாம் நன்றி, ஒற்றுமை, சுறுசுறுப்பு இப்படி பல நல்ல பண்புகளை கத்துக்கணம்னு சொன்னீங்களே அதையெல்லாம் விட ஒரு நல்ல பண்பை நாம் அஃறிணை கிட்டே இருந்து கத்துக்கணுங்க. உலகத்தில் எந்த ஒரு மிருகமும் பறவையும் தான் பெற்று வளர்த்து ஆளாக்கிய கன்றுகள் குஞ்சுகளிடமிருந்து எந்தப் பிரதியுபகாரத்தையும் எதிர்பார்க்கிறதில்லை. தன் கடைசிக் காலம் வரை தானே மூக்காயியும்" என்ற நல்லதொரு தத்துவத்தோடு இக்கதை முடிகிறது. இன்றைய குடும்பங்களில் தாயின் எதிர்பார்ப்புகளும், பிள்ளைகளின் ஏமாற்றங்களும் கண்ட ஆசிரியர் பறவை விலங்குகளின் வாழ்க்கையை முன் வைக்கிறார். பிரதிபலன் கருதாத குடும்பங்களில் சிக்கல் குறையும். மகிழ்ச்சி அதிகரிக்கும் என்ற நெடு நோக்கில் விவரிக்கின்றார்.

**மனைவியாகப் பெண்**

தங்கள் கல்யாண நாளை மகிழ்ச்சியாகக் கொண்டாட நினைக்கின்றனர் ஒரு தம்பதியர். அன்று ஊரிலிருந்து மனைவியின் தந்தை, தங்கை, தங்கையின் ஒரு வயதுக் குழந்தை ஆகியோர் வருகின்றனர். பம்பரமாகச் சென்று அவரவர்க்கு வேண்டியதைச் செய்து அவர்களை சினிமாவுக்கு அனுப்பி விட்டு கணவன் முன்னால் அலங்கரித்து நிற்கிறாள். தன் மனைவியின் முப்பரிமாணத்தைக் கண்ட கணவன்,"நீ என்னுடைய மனைவி மட்டுமில்ல.. ஒரு தந்தையின் மகளாகவும், விதவைத் தங்கையின் அக்காவாகவும், தகப்பனை இழந்த குழந்தையின் பெரியம்மாவாகவும் இருக்கிறவள். இன்னைக்குத் தான் என் மனைவியின் முழுப்பரிமாணத்தையும் ரசித்திருக்கிறேன்" என்று மகிழ்ச்சி அடைந்து மனைவிக்கு கால் அமுக்கி விடுகிறான். கணவன் என்பவன் மனைவியின் சுகத்தில் மட்டுமே பங்கெடுப்பவனாக இருக்கக் கூடாது. துக்கத்திலும் பங்கெடுப்பவனாக இருக்க வேண்டும் என்று உணர்கிறான். தன் மனைவி என்ற ஒரு பரிமாணத்தில் மட்டுமே பார்த்து,அதனால் குடும்பத்தை இன்னலுக்குள்ளாக்கும் கணவன்மார்களுக்கு இது ஒரு 'வழிகாட்டிக் கதை'. உறவுகள் சீர்பட மனச் செம்மையே முதலில் தேவை என்பதை இக்கதை மூலம் ஆசிரியர் உணர்த்துகிறார்.

'ஒருவரையொருவர்' என்ற கதையில் ஆசிரியரின் வலது இடபுறம் குடியிருக்கும் இரு தம்பதிகளை விமர்சிக்கின்றார். வலதுபுறம் உள்ள தம்பதிகள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து உதவி செய்து மிக மகிழ்ச்சியோடு குடும்பம் நடத்துகிறார்கள். இடதுபுறம் உள்ள வீட்டில் கவிஞரின் மனைவியின் சத்தம் எப்பொழுதும் கேட்டுக் கொண்டேயிருக்கும். இவ்வளவு கூச்சல் குழப்பங்களுக்கிடையே அருமையாகக் கவிதை எழுதும் கவிஞரின் பொறுமையை நினைந்து வியப்பார்.

மகிழ்ச்சியாகவும் உல்லாசமாகவும் இருக்கும் வலதுபுறத் தம்பதியர் வீட்டில் திடீரென்று ஒரு நாள் உண்டாகும் கூச்சலால் அக்கம்பக்கத்தார் கூடிவிடுகின்றனர். கணவனின் சட்டையில் சென்ட் வாசனை, பவுடர் வாசனை கண்டு சந்தேகம் கொண்டதே கூச்சலுக்குக் காரணம். கணவன் விளக்கியும் ஏற்றுக் கொள்ள வில்லை. "கணவன் - மனைவியரிடையே வெறும் உணர்ச்சிபூர்வமான அன்பு மட்டும் இருந்தால் இப்படித்தான். சின்னக் குற்றத்தையே பெரிதாக்கி விடும். குற்றம் இல்லாததையும் குற்றமாக நினைக்கத் தோன்றும். கணவன் மனைவி கொஞ்சறதும் குலாவுறதும் முக்கியமில்லை. ஒருத்தரை ஒருவர் புரிஞ்சுக்கணும்"[8] தன்னுடைய கணவன் இப்படியெல்லாம் செய்யக் கூடியவனா இல்லையான்னு புரியாததால் வந்த விளைவு இது என்று கவிஞர் ஆழ்ந்து சிந்தித்து விளக்கம் தருகிறார். கவிஞர் தன் மனைவியைப் பற்றியும் விமர்சிக்கிறார். "என் மனைவியின் வாய்தான் அப்படியே தவிர மனசு தங்கம்... என் கவிதைகளை அவள் ரசிக்கலாம் இருக்கலாம்... என்னை கணவனாகப் பார்க்கத் தெரிந்தவள்."[9]என்று விமர்சிக்கிறார்.முந்தையே கருத்தே இங்கும் வலியுறுத்தப்படுகிறது. குடும்பங்களில் கணவன் - மனைவி பரஸ்பரம் 'ஒருவரையொருவர்' என்ற கதை விளக்கும். கணவன் - மனைவியர் புரிந்து கொள்ளல் - புரிந்து கொள்ள முயற்சித்தல்,பண்பு வளர்ந்தால் குடும்பச் சிக்கல் பல

குறையும். அறிவியல், உளவியல் அறிவு குடும்ப உறவு சீர்பட, நின்று நிலைக்கத் தேவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாடுபொருள் என்பதை நாம், பின்வருமாறு விளக்கலாம். பொதுவான வாழ்வியல் கொள்கைகளை எடுத்துரைக்கும் கூற்றே அது.... "கருத்துக்கள் மூளையைச் சார்ந்ததாகலின் அவற்றை வாசகர்களிடம் நேரடியாகக் கூற முடியாது. அக்கருத்துக்கள் விளக்கமுறும் வகையில் அவை வாழ்க்கைக் காட்சிகளாக உருமாற்றம் செய்யப்பட வேண்டும். அப்பொழுது தான் அப்படங்கள் படிப்போரின் நெஞ்சில் ஆழமாகப்பதிந்து அவர்கள் தம் கற்பனையை இயக்கி அவற்றற்கீடான கருத்துக்களை நெஞ்சில் தூண்டமுடியும்"[10] என்ற வெஸ்டர்ன் கூற்று இங்கு நினைக்கத் தக்கது.

**மருமகளாகப்பெண்**

மாமியார் பாராட்டிய மருமகள் என்ற பெயர் வாங்குவது அரிது. மருமகள் பெருமையாக நினைத்த மாமியாரைக் காண்பதும் அரிது. பல குடும்பங்களில் வடதுருவம் தென் துருவமாகவே மாமியார் மருமகள்கள் உள்ளனர். வயது இடைவெளியும், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாததும் இக்குடும்பச் சிக்கலுக்குக் காரணமாக இருக்கலாம். 'மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன்குடம்' என்பது நம் நாட்டுப் பழமொழி.

மாமியார் மருமகள் குடும்பச் சிக்கலை ஒரு புதுக்கோணத்தில் ஆராய்ந்து வழி சொல்கிறது 'பாஞ்சாலியும் பாமாவும்' என்ற கதை. காமாட்சிக்கு மூன்று மருமகள்கள். முதல் இரண்டு மருமகள்கள் வீட்டில் சிலகாலம் தங்கி விட்டு அங்கு இருக்க முடியாமல் மூன்றாவது மருமகளோடு தங்கி விட்டாள் மாமியார். மூன்றாவது மருமகள் லதா பி.ஏ. படித்திருந்தும் காலால் இட்ட வேலையை தலையால் செய்கிறாளே என்று மற்ற இருவரும் எரிச்சலடைகின்றனர். தாங்கள் எதுசெய்தாலும் குற்றம் காணும் மாமியார் இந்த லதாவிடம் எப்படி நடத்துக்கிறாங்கது ஆச்சரியமாயிருக்கு என்று தன் உள்ளூரில் இருக்கும் பள்ளித் தோழியிடம் முறையிடுகின்றனர். வேறுவேறு ஊரிலிருந்து மாமனார் திவசத்திற்கு வந்துள்ளனர். அவர்கள் மாமியார் மருமகள் போல் இல்லை: தாய் மகள் போல் உள்ளனர். எது செய்தாலும் லதா பொறுத்துக்கொள்வாள். மாமியார் எது செய்தாலும் நமக்கு நல்லதுக்குத் தானே? என்பாள் லதா. முதலில் கஸ்டமாகத் தான் இருக்கும். உடம்புக்கு நல்லது செய்கிற மருந்துகளெல்லாம் கசக்கத் தானே செய்யும்னு சொல்லுவா என்று தோழி மூத்த மருமகள்களிடம் இவ்வாறு கூறுகிறாள். கோவிலுக்குச் செல்கின்றனர். அங்கு கதாகாலட்சேபம் நடக்கிறது. "ஒரு சமயம் சத்யபாமா திரௌபதியைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிறா... கிருஷ்ணனுடைய முழு அன்பையும் தானே அனுபவிக்க முடியலையே. உன்மேல் பாண்டவர்கள் இப்படி ஒரே அன்பைப் பிரவேக்கிறாங்களே ஏன்? பாஞ்சாலி சிரிச்சிக்கிட்டே பதில் சொல்றா. அதுக்குக் காரணம் என் மாமி தான். என் மாமியைத் தாயினும் மேலாகப் போற்றி வணங்கி அன்பு செலுத்திப் பணிவிடை செய்து வர்றேன். இதனாலே என் கணவர்களுக்கு என் மேலே தானாகவே அன்பு அதிகமாகுது என்கிறா பாருங்கோ. எப்பேர்பட்ட சைக்காலஜி விசயம்"[11] உறவுகளில் விரிசல் வராமல் இருக்க உளவியலின் இன்றியமையாமையைச் சுட்டுகிறார். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பொறுத்துக் கொள்ளும் மனப்பான்மை, எது செய்தாலும் நமக்கு நல்லதே என்று பக்குவ மனநிலை மருமகளுக்கு வேண்டும் என்கிறார். படித்த மருமகள் நாம் படித்திருக்கிறோம் என்று கர்வம் கொள்ளக் கூடாது என்றும் சுட்டுகிறார்.

**விதவைப்பெண்**

கணவனை இழந்த கைம்மை வாழ்வு ஒரு துக்க வாழ்வாகவே சமுதாயத்தில் கருதப்பட்டு வருகிறது. தாலி அறுத்தவள், அறுதாலி என்று இன்றும் கருதும் சமுதாய நடைமுறையினை,

"புகினும் ஓர் அகம் சகுனம் தீதென
முகம்கூசுவர் மகளை ஏசுவர்"[12]

என்ற புரட்சிக் கவிஞரின் கூற்று இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது. சமூகத்தில் பெண்ணைத் துன்புறுத்தும் மாற்றவியலா விதியை அய்க்கண், விதவைப்பெண் கோணத்தில் நின்று பார்த்து 'வாழ்வில் ஒரு முறை' என்ற கதையைத் தருகிறார். விதவைப் பெண்கள் தாய் நிலையில் இருந்து நோக்கி 'ஒரு தாய் பெண்ணாகிறாள்' என்ற கதையைத் தருகிறார். விதவையின் மகள் நிலையில் இருந்து 'இவள் மகள் அவள் தாய்' என்ற கதை விதவைப் பெண்களின் சிக்கலை ஆராய்கிறது. மூன்று கதைகளிலும் விதவைகளின் வேறு வேறு மனநிலைகள் படம் பிடிக்கப்படுகின்றன.

அலுவலக டைப்பிஸ்ட் சுபத்திரா தன் உடன் பணியாற்றும் ஒருவரை காதலித்து திருமணம் செய்து கொள்ள, சில நாட்களிலேயே அவன் அகால மரணம் அடைந்து விடுகிறான். விதவைப் பெண் பற்றிச் சமுதாயம் சாற்றும் குற்றங்களைப் பொறுத்துக் கொள்கிறாள். “ஆனானப்பட்ட ஜாக்குலின் ஒரு ஒனாசிஸ் கிடைத்தவுடன் மறுமணம் செய்து கொள்ளவில்லையா,? விதவைப்பெண்கள் பணக்காரன்களுக்கு வலை விரித்துக் கொண்டேயிருப்பார்கள்” என்ற உடன் பணியாற்றுவோரின் அவதூறு இவள் காதில் விழுந்து கொண்டே இருக்கிறது. இதிலிருந்து நிம்மதியாக இருக்கலாம் என்று வேறோரு ஆபீசுக்கு மாற்றல் வாங்கிச் செல்கிறாள். அங்குள்ள மானேஜா் வீட்டிற்குப் பெண் கேட்டு வருகிறான் தாயும் மாமனாரும் எவ்வளவோ மறுமணம் செய்து கொள்ளச் சொல்லி வற்புறுத்துகிறார்கள். திருமணம் என்பது ‘வாழ்வில் ஒரு முறை’ தான் என்று மறுத்து விடுகிறாள். இவளுடைய பின்புலம் இவளை மறுமணத்தின் மேல் வெறுப்புக் கொள்ளச் செய்கிறது. மறுமணம் வரவேற்கப்படும் சூழலில் இவள் வாழ்ந்திருந்தால் இந்த முடிவுக்கு வந்திருக்க மாட்டாள். எண்ணங்களும், செயல்களும், முடிவெடுப்பதற்குச் சூழலும் ஒரு காரணமாகின்றன என்று ஆசிரியர் சுட்டுகிறார்.

‘விதவையானவள் விதவையாகத் தான் வாழ வேண்டும். அது தான் குடும்ப கௌரவம்’ என்று நினைக்கும் குடும்பத்தில் மூத்தமகள் விதவையாகி விடுகிறாள். பக்கத்து வீட்டு ராமு அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான். குடும்ப கௌரவத்தைப் பார்த்து முதலில் மகளுக்கு மறுமணத்தை மறுத்த தாய், பெண் என்ற கோணத்தில், பெண்ணுக்கு இயல்பாக எழும் உணர்ச்சிகளை உணர்ந்தவுடன், மகளுக்கு மறுமணம் செய்ய முடிவெடுக்கிறாள்.

“பேழையுள் தீ வைத்து பிறா் அறியாமல்
பேணில் அடங்குமோ”[13]

என்று சாமி சிதம்பரனார், சீா்திருத்தப் பாடல்கள் வழி கூறும் கருத்து ‘ஒரு தாய் பெண்ணாகிறாள்’ என்ற கதையின் கருவாக அமைகிறது.

ஒரு பெண்ணின் உணர்ச்சிகளை ஒரு பெண்ணால் தான் புரிந்து கொள்ள முடியும் என்பதால், ஒரு பெண்ணின் கோணத்திலிருந்து விதவையின் உணர்ச்சிப் பிரச்சனைகளை ஆராய்கிறார்.

ராதாவும் கிருஷ்ணனும் கல்லூரிக் காதலர்கள். குடும்பச் சூழல் காரணமாக வேறுவேறு நபர்களைத் திருமணம் செய்து இவள் விதவையாகவும், அவன் மனைவியை இழந்தவனாகவும் ஆகி விடுகின்றனர். இவளுக்கு ஒரு மகளும், அவனுக்கு ஒரு மகனும் உள்ளனர். தன் தாய் மறுமணம் செய்து கொள்ள விரும்புகிறாள் என்பதை மகள் அறிந்து மகிழ்ச்சியடைகிறாள். ‘இந்தக் காலத்திலே வயதானவர்களும் விதவைகளும் மறுமணம் செய்து கொள்வதை வெறும் ‘செக்ஸ்’ பிரச்சனையாகக் கருதக் கூடாது. அதை ‘ஸெக்யூரிட்டி’ பிரச்சனையாகக் கருதணும்… வாழ்க்கையில் சமூகத்தில் தனக்கு ஒரு ஆதரவு கிடைப்பதற்காக மறுமணம் செஞ்சுக்கிறதை ஏன் பாவம்னு கேவலமாய்ப் பேசணும்”[14] என்று அறிவுப் பூர்வமாகச் சிந்திக்கிறாள். இப்பின்புலத்தில் ஆசிரியர் மறுமணத்தை வரவேற்கிறார். மரபுகளும் கோட்பாடுகளும் மனிதனால் மனித வாழ்வுக்கு ஏற்படுத்தப்பட்டவையே. காலச்சூழலுக்கேற்ற வண்ணம் மரபுகளை மாற்றிக் கொள்வதால் பெரிய குற்றம் ஆகி விடாது என்ற கருத்து இக்கதையில் தொனிக்கிறது. சமுதாயம் காலங்காலமாக பல்வேறு கட்டுப்பாடுகளை விதவைப்பெண்களின் வாழ்வில் புகுத்தி, உரிமைகள் மறுக்கப்படுவதை அவா்களின் வாழ்வுச் சிக்கல்களை இம்மூன்று கதைகளிலும் சுட்டப்படுகிறது,

**தாய்மைப்பேறு பெறாத பெண்கள்**

விதவைப் பெண்களுக்கு சமுதாயம் சிலகட்டுப்பாடுகளை வைத்திருப்பது போல் தாய்மைப்பேறு பெறாத பெண்களுக்கும் சில மரபுகளை விதித்துள்ளது. சுபகாரியங்களில் அவா்கள் பங்கெடுப்பதை சமுதாயம் அனுமதிப்பதில்லை. ‘மலடி’ என்ற பட்டத்துடன், மனக்குறையுடனே வாழ்நாளைக் கழிப்பா். குழந்தைப்பேறு இல்லாததால் கணவன் - மனைவி உறவிலும் விரிசல் வருவதும் உண்டு. குழந்தையில்லை என்று தெரிந்தவுடன் கணவன் இரண்டாம் மணம் செய்து கொள்வதும், முதல் மனைவி குடும்பத்தில் ஒதுக்கப்படுவதும் நடைமுறையில் காணப்படும் நிகழ்ச்சிகள்.

‘இவள் கிழக்கு அவள் மேற்கு’ என்ற கதையின் கரு இது. கமலா தம்பதிகளுக்குக் குழந்தையில்லை. தோழி மேலைநாடுகளில் படித்து, செயற்கைக் கருத்தரிப்பு முறையில் டாக்டா் பட்டம் பெற்றவள். தன் தோழி கமலாவை சோதித்துக் குறையென்ன என்பதை

சொல்கிறேன் என்கிறாள். டாக்டர் என்பதால் தன்பால் குறையில்லை. தன் கணவரிடம் குறையுள்ளது என்ற உண்மையைச் சொல்ல, உன் கணவனை விவாகரத்து செய்து விட்டு வேறொரு கல்யாணம் செய்து கொள்ள வேண்டியது தானே' என்கிறாள். “கேவலம் குழந்தை வேணும்கிறதுக்காக அந்த நல்ல கணவரை என்னாலே இழக்க முடியாது…. அந்த நல்லவரைப் பத்தி ஆண்மையில்லாதவர்னு சொல்லக்கூடாதன்னுதான் ‘மலடி’ என்ற குறையை நானாக என்மேல் சுமத்திக்கிட்டிருக்கேன்.”[15] தன்னிடம் குறையில்லாத போதும், குறையுள்ள தன் கணவனை விட்டுக் கொடுக்காத பெண்ணின் பெருமை இக்கதையில் சுட்டப்படுகின்றது.

இதே போல் ‘இராமன் லட்சுமணன் சீதை’ என்ற கதையில் வரும் அம்பலக்காரர் தன் மனைவியின் குறையைத் தன் மேல் சுமந்து கொள்கிறார். இரண்டாம் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று சொல்பவர்களிடம் “வேண்டாங்க….. பரம்பரைக்குத் தான் குழந்தை தேவை. தாம்பத்யத்துக்குத் தேவை இல்லை. எனக்கு அவள் பெண் குழந்தை. நான் அவளுக்கு ஆண்குழந்தை”[16] என்று சிரித்துக் கொண்டே சொல்வார். மருத்துவர் சோதனை செய்து யார் ஒருவருக்கு குறை உள்ளது என்றாலும் மற்றவருக்கு வருத்தம் ஏற்படும் என்று சொல்லாமலேயே இருந்து விடுகின்றனர். இங்ஙனம் தாய்மைப்பேறு பெறாத பெண்களின் சமுதாயச் சிக்கலும் இவ்விரண்டு கதைகளில் ஆராயப்படுகிறது.

## முடிவுரை

- ✓ ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனுக்குக் குடும்பத்தைச் சொர்க்கமாக்கித் தருகிறார்.
- ✓ இந்தியாவில் பெண்கள் அடிமைகள் போல் நடத்தப்படுகிறார்கள் என்பது தவறான கருத்து. சிறுசிறு காரணங்களுக்கெல்லாம் மேலை நாடுகளில் விவாக ரத்து நடைபெறுகிறது. இந்திய நாட்டில் நடைபெறுவதில்லை. இங்கு நிலையான இல்லற வாழ்க்கை இருப்பது போல் பிற நாடுகளில் நடைபெறுவதில்லை.
- ✓ கணவன் மனைவியின் சுகத்தில் மட்டுமே பங்கெடுப்பவனாக இருக்காமல், துக்கத்தில் பங்கெடுப்பவனாக இருக்கிறார்கள்
- ✓ பிள்ளைகளின் ஏமாற்றத்தினால் தாயின் நிலை அஃறிணையின் எண்ணங்களோடு ஒத்தது.

## அடிக்குறிப்பு

1) டேவிட் சித்தையா, வளரும் தமிழ் இலக்கியம், ப.134.
2) உப்புநீர்ப்பூக்கள் (சிறுகதைத் தொகுதி), முன்னுரை
3) அய்க்கண், வேர் (சிறுகதைத் தொகுதி),ப. 18
4) மேலது,ப. 24
5) அய்க்கண்,‘அவள் ஓர் அஃறிணை’ ப.30
6) அய்க்கண்,‘பெண்மையின் பரிமாணங்கள்ப. 16
7) அய்க்கண் ‘ஒருவரையொருவர்’ ப.47
8) மேலது, ப. 47
9) harild western. Form in Literature. p.19
10) அய்க்கண், பாஞ்சாலியும், பாமாவும். ப. 139
11) பாரதிதாசன் கவிதைகள், ப. 118.
12) சாமி சிதம்பரனார், சீர்திருத்தப் பாடல்கள், ப. 28
13) அய்க்கண், இவள் மகள் அவள் தாய் ப.117
14) அய்க்கண், இவள் கிழக்கு அவள் மேற்கு, ப. 88
15) அய்க்கண், இராமன் லட்சுமணன் சீதை ப. 22